# வார்த்தை மாம்சமாகி

## நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மனித அவதாரம் பற்றி ஒரு ஆராய்ச்சி

Peter Evensen | January 2018

## தேவன் மற்றும் மனிதன்: ஒரு நபர், இரண்டுதன்மைகள் (அ) சுபாவங்கள

இயேசு மெய்யான கடவுள் என்று பைபிள் நமக்கு காட்டுகிறது:

> **1 யோவான் 5:20** "அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார்."
>
> **தீத்து 2:13** "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது."
>
> **ரோமர் 9:5** "பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன். ஆமென்."

இயேசு மெய்யான மனிதன் என்றுகூட பைபிள் நமக்கு காட்டுகிறது:

> **யோவான் 1:14** "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்..."
>
> **1 தீமோத்தேயு 2:6** "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரியசாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."
>
> **எபிரெயர் 2:14, 17** "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; . . . அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது."

இயேசு தன்னைதானே "மனுஷகுமாரன்" என்று அழைத்தபோதெல்லாம் தான் மெய்யான மனிதன் என்று பிரகடணப்படுத்தினார்.

இயேசு நம்மை போலவே மனித இயல்பு அல்லது சுபாவம் உள்ளவராய் இருந்தார். நம்முடைய பாவ இயல்பு அவரிடம் இல்லை எவ்வித பாவமும் அவரிடம் இல்லை:

> **எபிரெயர் 2:17** "அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது."
>
> **ஏசாயா 53:9** "...அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."
>
> **2 கொரிந்தியர் 5:21** "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."
>
> **1 பேதுரு 2:22** "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை;"
>
> **எபிரெயர் 7:26** "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு ஏற்றவராயிருக்கிறார்."

மனிதர்களுக்கு மிக அவசியமான உண்மையான ஆகாரம், நீர், ஓய்வு, தூக்கம் முதலான மனிதர்களுடைய பெலவீனகள் அனைத்தையும் இயேசு சுயமாக தம்மேல் எடுத்துக்கொண்டார்.

இவைகளை சுவிசேஷங்களில் நாம் பார்க்கக்கூடும்.

ஆனால் மனிதர்களுக்கு பொதுவான பிரச்சனைகளாக இருக்கின்ற சரீர வியாதிகள், பலவீனமான சரீர அவயங்கள், முதலானவைகள் எல்லாவற்றையும் இயேசு அனுபவித்ததாக நமக்கு ஆதாரம் இல்லை. நம்மை பாவத்திலிருந்து விடுதலை ஆக்குவதற்கு இந்த விசேஷமானவைகளை அவர் எடுத்துக்கொள்ளவில்லை.

மேலே சொன்ன வாக்கியங்கள் எல்லாம் இயேசு இரண்டு இயல்பு அல்லது சுபாவம் உடையவராய் இருந்ததை நமக்கு தெரியப்படுதுகிறது. தெய்வீகத் தன்மை அல்லது சுபாவம் மற்றும் மனித தன்மை அல்லது சுபாவம், இவ்விரண்டும் சுபாவங்களும் ஒரு நபருக்குள் மனிததேகத்தில் பெத்லகேமில் பிறந்த இயேசுவில் ஐக்கியமாய் இருந்தன.

## மனித அவதாரம்

அந்த வார்த்தை தேவனாய் இருந்தது அது சரீரபிரகாரமாய் நமக்குள்ளயே வாசம் பண்ணினது. இயேசு பூலோக அவதாரத்தில் தெய்வீக சுபாவம் செயல்திறன் உடையதாக இருகின்றது மற்றும் மனித சுபாவம்  சாத்வீகமாக செயலற்ற நிலையில் உள்ளது. தேவனே மனிதன் ஆனார் ஆனால் மனிதன் தெய்வமாக முடியாது:

> **கொலோசெயர் 2:9** “ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது.”
>
> **1 தீமோத்தேயு 3:16** “அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,”
>
> **ரோமர் 1:5** “மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.”
>
> **கலாத்தியர் 4:5** “காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.”

இயேசுவினுடைய தெய்வீகத்தன்மை மாறாதது. வார்த்தை தேவனாக மாறினபோது அவருடைய தெய்வீகதன்மையில் சுபாவத்தில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. தெய்வீக சுபாவத்தினுடைய மனித தேக நபரத்துவமே மனித சுபாவத்தில் தொடர்ந்து இருந்தது மற்றும் வாசம் செய்தது.

அவரிடத்தில் இருந்தத இரண்டு சுபாவங்கள் வெவ்வேறாக இருந்து இயேசுவினுடைய தெய்வீக சுபாவம் நித்தியத்திலிருந்து இருக்கிறது அப்படியென்றால் இந்த உலகம் உண்டாவதற்கு முன்பே இயேசு தேவனுடன் இருந்தார் (யோவான் 1:14, 18:3,16). அனால் காலம் நிறைவேறினபோது தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இயேசுவினுடைய மனித சுபாவம் ஆரம்பமானது. (கலாத்தியர்4;4) இது ஒரு அற்புதமான கிரியையினால் கன்னி மரியாளின் கர்ப்பத்தில் ஆரம்பமானது (லூக்கா1;35,மத்தேயு 1:20).

இயேசுவினுடைய சரீரத்தில் இயேசுவினுடைய தெய்வீக சுபாவம் வாசமாயிருந்தது என்றும் மற்றும் இயேசுவினுடைய தெய்வீக சுபாவம் இயேசுவினுடைய மனித சுபாவத்தில் வெளிப்புறமாக இல்லை என்று கொலேசியர் 2:9 நமக்கு சொல்லுகின்றது.

மனிதர்களை இரட்சிக்கும் வேலையை செய்து முடிப்பதற்கு கிறிஸ்து இயேசு சிலுவை அவமான வேலையில் இருந்தபோது, அவர் மனித சுபாவம் இருந்த சூழ்நிலைக்கு இடம் மற்றும் வேலைக்கு கட்டுப்பட்டதாக இருந்தது. இயேசுவினுடைய வெற்றி சிறந்த சமயத்தில், அவருடைய மனித சுபாவம் என்பது மற்றும் இடத்தினுடைய மனித உறவுகள் எல்லையினின்று எடுதுப்போடப்பட்டது மற்றும் இப்பொழுது அது அதற்குஉட்பட்டதாய் இருக்காது:

> **மத்தேயு 28:18, 20** “அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.”

## பண்புகளினுடைய பகிர்ந்தளிப்பு

இயேசுவினுடைய மனித தேகத்தில், தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவம் ஐக்கியப்பட்டு இருக்கிறது. இந்த ஐக்கியத்தின் காரணமாக, இயேசுவில் தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவம் தம்முடைய பண்புகளை ஒன்றுடன் ஒன்று பகிர்ந்து கொள்கிறது. என்று பைபிள் காண்பிக்கின்றது.

கிழ்கண்ட வாக்கிய பாகத்தில் இயேசுவினுடைய தெய்வீக சுபாவ மற்றும் மனித சுபாவம் தம்முடைய பண்புகளை உடையதாக நாம் காணக்கூடும்:

**ரோமர் 9:5** “பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன். ஆமென்.”

**1 பேதுரு 3:18** “ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு,”

**எபிரெயர் 13:8** “இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.”

இங்த கீழ்கண்ட வாக்கிய பாகத்தில் அவருடைய தெய்வீக சுபாவத்திற்கு மனித பண்டிகள் கொடுக்கப்பட்டது:

**அப்போஸ்தலர் 3:15** “ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்...”

**1 கொரிந்தியர் 2:8** “அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே.”

**ரோமர் 8:32** “தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?”

**கலாத்தியர் 2:20** “...என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.”

**அப்போஸ்தலர் 20:28** “ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.”

இந்த கிழ்க்கண்ட வாக்கிய பாகத்தில் அவருடைய மனித சுபாவத்திற்கு தெய்வீக பண்புகள் கொடுக்கப்பட்டது.:

**யோவான் 6:62** “மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?“

**யோவான் 8:58** “அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”

**1 கொரிந்தியர் 15:47** “முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.”

## மாட்சிமையினுடைய பகிர்ந்தளிப்பு

இயேசுவிலே,தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவம் இரண்டும் கூட ஒரே மாட்சிமையை பாகங்களாக இருகின்றது. என்று பைபிள் நமக்கு காட்டுகின்றது. என்றால் தெய்வீக அதிகாரம், சக்தி ,மற்றும் கணம் மனித சுபாவத்திற்கு கொடுக்கப்பட்டது ஏனென்றால் தெய்வீக சுபாவம் இப்பொழுதே இவ்விஷயங்களை உடையதாக இருகின்றது.

இயேசு சர்வவல்லமையை உடையவராய் இருப்பதை நாம் பார்க்ககூடும்:

**யோவான் 5:19, 21** “அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்...பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.”

**மத்தேயு 28:18** “அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.”

இயேசு சகலத்தையும்பார்க்கும் சக்தியை உடையவராய் இருப்பதை நாம் பார்க்க முடியும்:

**மத்தேயு 9:2** “...இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு...”

**லூக்கா 5:22** "இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து..."

**யோவான் 2:24-25** "அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை."

**யோவான் 4:16-19** – இயேசு சமாரியப் பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையை அறிந்தவராய் இருந்தார்.

இயேசு எல்லா இடங்களிலும் நீக்கமற நிறம்பி இருப்பவர் என்று நாம் பார்க்க முடியும்:

**மத்தேயு 18:20** "ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."

**மத்தேயு 28:20** "...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

**எபேசியர் 1:23** "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்."

**எபேசியர் 4:10** "இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்."

ஏனென்றால் இந்த இரண்டு சுபாவமும் இயேசுவினுடைய மனித தேகத்தில் ஐக்கியமானது. ஆகவே கிறிஸ்துவினுடைய மனித சுபாவம் தெய்வீக சுபாவத்துடன் ஐக்கியமாகி(வார்த்தை) இதை அவருடைய ஊழியங்களில் அடிக்கடி நம்மால் பார்க்க முடியாது. ஆனால் அதற்கு ஒரு சில உதாரணங்கள் அவ்விடத்தில் உள்ளன:

**மத்தேயு 14:25** "இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்."

**லூக்கா 4:30** "அவரோ அவர்கள் நடுவினின்று கடந்துபோய்விட்டார்."

**யோவான் 8:59** "அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்."

**யோவான் 3:13** "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை."

அனால் அவர் தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டபோது இயேசுவின் சந்நிதான எல்லாம் மறைந்துபோயின. இயேசு பரமேறினப்போது நம்மை விட்டு விடவில்லை. அவர் தம்முடைய சீஷர்களுக்கு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மறைந்து போனார் (அப்போஸ்தலர் 1:9). இயேசு வாக்குத்தத்தம் செய்தபடியே நம்முடன் இன்னும் இருக்கிறார்.

இயெசுவினுடைய இரண்டாம் வருகை உண்மையாக சரீரப் பிரகார மான வருகை அல்ல, ஆனாவ் இப்பொழுது மறைந்திருக் கின்ற அவரூடைய உண்மையான மகிமயுடன் கூடிய திரும்பவும் தோன்றும் ஒரு பிரசன்னம் ஆகும்:

**தீத்து 2:13** "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது."

**2 தெசலோனிக்கேயர் 2:8** "நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்."

இயேசு தெய்வீக கணம் உடையவர் என்பதை வேதம் நமக்கு காட்டுகின்றது:

**யோவான் 5:22-23** "அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்.”

**பிலிப்பியர் 2:9-11** “ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து **கர்த்தரென்று** நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.”

இந்த தெய்வீக குணாதிசயங்கள் இயேசுவுக்கு கொடுக்கப் படுகின்றது என்று பைபிள் பேசுகின்றபோது, அதனுடைய அர்த்தம் என்ன இயேசுவினுடைய மனித சுபாவத்திற்கு இந்த தெய்வீக பண்புகள் கொடுக்கபடுவதை நாம் கவனிக்கவேண்டும். இயேசுவினுடைய தெய்வீக சுபாவம் இப்பொழுதே இந்த பண்புகளை உடையதாக இருகின்றது. இயேசுவினுடைய தெய்வீக சுபாவம் இப்பொழுதே சர்வ சக்தியானது, சகலத்தையும் அறிந்துக்கொள்வது, எல்லா இடங்களிலும் இருப்பது, மற்றும் தெய்வீக கணத்தை உடையதாக இருக்கிறது. ஆனால் இயேசுவினுடைய மனித சுபாவம் இந்த விஷியங்களை உடையதாக இல்லை. ஆனால் இயேசு கர்ப்பத்தில் இருந்த போது மனித சுபாவத்துடன் தெய்வீக சுபாவம் கலந்தபோது இந்த பண்புகள் எல்லாவற்றையும் மனிதசுபாவம் சுவீகரித்துகொண்டது.

இயேசுவினுடைய மனித சுபாவம் இந்த தெய்வீக பண்புகள் கொடுக்கபடுவதைக்குறித்து பவுல் இயேசுவை தேவனுடைய சாயலில் இருப்பதாக தன்நிரூபத்தில் அழைக்கிறார்:

**பிலிப்பியர் 2:5-8** “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.”

இங்கே பவுல் இயேசுவினுடைய மனித அவதாரம் பற்றி பேசவில்லை அவதாரத்திற்கு முன்பு உள்ள வார்த்தை குறித்துக்கூட பவுல் பேசவில்லை ஆதியிலே இருந்த வார்த்தை தேவ சாயலைக்காட்டிலும் அதிகமாக அதாவது வாக்கியமே தேவனாக இருகின்றது.

பிலிப்பியர் 2:5-8 எழுதினப்பிரகாரம் வார்த்தை சரீர பிரகாரமான நிலையை குறித்து பேசுவதாக உள்ளது. வார்த்தை மாம்சமான பிறகு அந்த வார்த்தைக்கு இயேசு என்று பெயர் கொடுக்கப்பட்டது. இயேசு தன்னுடைய மனித சாயலில் இருக்கின்றார். மனுஷகுமாரன் தெய்வீக சக்திகளை உடையவராய் இருந்தார். இயேசு வினுடைய மறுரூபமாகுதலின் போது இந்த அமைப் பினுடைய மறுரூபமாகுதலின், ஒருநொடிநேரகாட்சியை நாம் பார்க்கலாம். இயேசு சரீர பிரகாரமாய் தேவனுடைய சாயலில் இருப்பினும் அவர் எப்பொழுதும் தம்முடைய தெய்வீக சக்திகளை பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக இயேசு ஒரு சேவகனுடைய சாயலை எடுத்துகொண்டார் மற்றும் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையின் மேல் மரித்த நேரம் வரைக்கும் அந்நிலைவரைக்கும் தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டார்.

## இரட்சிப்பின் வேலையிலே பகிர்ந்தளிப்பு

இயேசு கிறிஸ்துவில், தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவம் இரண்டும் கூட இரட்சிப்பின் வேலையை பகிர்ந்துகொண்டன என்று பைபிள் நமக்கு காண்பிக்கின்றது:

**1 கொரிந்தியர் 15:3-4** “நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து

**கலாத்தியர் 1:4** “அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;“

**1 யோவான் 3:8** “பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.“

**ஆதியாகமம் 3:15** “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.”

**லூக்கா 19:10** “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன்

வந்திருக்கிறார் என்றார்."

**1 தீமோத்தேயு 2:6** "அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,"

**லூக்கா 2:11** "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."

இந்த கிழ்கண்ட வாக்கிய பாகங்களில் இரட்சிப்பின் வேலை என்பது இயேசுவை தேவனுடைய குமாரனாக மற்றும் மனுஷகுமரனாக வர்ணிக்கின்றது. இந்த இரட்சிப்பின் வேலையில் ஒன்றுடன் ஒன்று கலந்துகொள்ளும் இரண்டு சுபாவமும் முக்கியமானது, பாவிகளான நாம் இரட்கருடைய தீவிரமான பாடு மற்றும் மரணத்தின் மூலம் மாத்திரமே இரட்சிப்பு பெற முடியும். ஆனால் கடவுள் தனக்குத்தானே பாடுகளுக்குட்பட்டு மரிப்பது என்பது சாத்தியமானது அல்ல அதே விதமாக சாதாரணமாக மனிதன் சர்வலோக பாவ மன்னிப்பிற்காக சரியான பரிபூரணமான பலியை சமர்பிக்க முடியாது. பாவம் மற்றும் மரணம் இதிலிருந்து நம்மை காப்பற்றுவதற்காக இயேசுவினுடைய மனித தேகத்தில் சேர்ந்த மனித சுபாவம் மற்றும் தெய்வீக சுபாவம் இரண்டும் மிக அவசரம் அவசியம்.

## சாரம்சம்

இயேசுவினுடைய மனித அவதாரம் மிகபெரிய இரகசியம் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார் (1 தீமோத்தேயு 3:16) இது நமக்கு முழுமையாக அர்த்தம் ஆக கூடிய அல்லது புரிந்து கொள்ளகூடிய காரியம் அல்ல, நாம் சாதரணமாக இதை விசுவாசத்தின் மூலம் மாத்திரமே நம்புகின்றோம். இயேசுவை பற்றி தேவனுடைய வார்த்தை என்னவெல்லாம் சொல்கிறதோ அவைகளை மாத்திரமே நாம் நம்புகின்றோம்.

வார்த்தையான தேவன் இயேசுவாக சரீரத்தின் சாயலை அணிந்து கொண்டார் என்று பைபிளில் அநேக வசனங்கள் எல்லாம் இயேசு தேவன் மற்றும் மனிதன் என்று நமக்கு காட்டுகின்றன.

தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவம் ஒரே மனிததேகமாக இயேசுவில் கலப்பதற்கு நாம் அவர்களை உண்மையாக வேறுவேறாக செய்யமுடியாது என்ற விஷயத்தை மிகமுக்கியமாக நாம் நினைவில் கொள்ள வேண்டும். இயேசுவில் உள்ள தெய்வீக சுபாவம் மற்றும் மனித சுபாவங்கள் சுதந்திரமாக வேலை செய்கிறது என்று நாம் சொல்லுவது சரியன்று நாம் மேலே காண்பித்த வண்ணமாக பைபிள் இயேசுவினுடைய இரண்டு சுபாவங்களையும் பிரிக்கவில்லை,அதற்கு பதிலாக இயேசு தன்னுடைய மனித தேகத்தில் தெய்வீகம் மற்றும் மனித பண்புகள் உடையவராய் இருந்தார் என்று பைபிள் விவரிக்கின்றது. தெய்வ மனிதனாக அவர் தெய்வீக கணத்தையும் உடையவராய் இருந்தார். மற்றும் தெய்வீக மனிதனாக மட்டும் இயேசு நம்முடைய இரட்சிப்பின் வேலையை முழுமையாக செய்துமுடித்தார்.

பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவில் முழுமையான இரட்சகராக மற்றும் பதிலீயாக கொடுத்தார். நம் இரட்சிப்பை நிறைவேற்றுவதற்கு தெய்வீக மற்றும் மனித சுபாவங்கள் இரண்டும் கூட அவசியமானது மற்றும் கலந்து இருக்க வேண்டியது. ஒரே மனித தேக (நபராக) தேவனாக மற்றும் மனிதனாக இயேசு, உலக பாவங்களை சுமந்து கொண்டு சென்ற தீர்த்த முழுமையான தேவ ஆட்டுக்குட்டி, நாம் வாழ முடியாத முழுமையான பாவமற்ற வாழ்வை வாழ்ந்தார். நம்முடைய பாவங்களுக்கு கிரயம் செலுத்தி, அவைகளை எடுத்து போடுவதற்கு நம் இடத்திலே நமக்கு பதிலாக மரித்தார். நமக்காக மரணத்தை தோறகடித்து வெற்றி வீரனாக அவர் மரணத்திலிருந்து உயிரோடு உயிர்த்தெழுந்து  திரும்பவும் எழுந்தார். இயேசு நம்முடைய தேவனாக இருந்து அவர் வாழ்க்கை மற்றும் மரணம் மூலம் நம் பாவங்களுக்கு மற்றும் சர்வ உலகத்தின் பாவங்களுக்கு கிரயம் செலுத்தி ஆனந்த பாக்கியமான நன்மையை நமக்கு கொண்டு வந்தார்.

இயேசு நம்முடைய மனித சுபாவத்தை பகிர்ந்து கொண்டதினால், அவர் இப்பொழுது நம்மேல் இரக்கம் காண்பிப்பதற்கு நமக்கு சரியான இரக்கம், தயவு, உள்ள பிரதான ஆசாரியர் ஆக இயேசு இருகின்றார். அவர் மட்டுமே நமக்கு சகாயம் செய்யக்கூடியவர் (எபிரேயர்2:17,18,4:15) மற்றும் இந்த உலகத்தின் முடிவு பரியந்தமும் நம்மோடு கூட இருப்பவர் அவரே. அவருக்கு மட்டுமே மகிமையும் கணமும், புகழும் உரித்தாகுவதாக, சேருவதாக ஆமென் (மத்தேயு 28:20).

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.
(எபிரெயர் 4:16)